(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 30.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, செத்தெம்பர் 24, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0198 / '09

1.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் யுத்த செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதான நிதி மூலம் யாது,

(iii) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரியினூடாக சம்பாதிப்பதற்கு எதிர் பார்க்கும் பணம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0255 / '09

2.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'அபி வெனுவென் அபி' நிதியம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இற்றைவரை இந் நிதியத்துக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தொகை யாது,

(ii) இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளினால் வழங்கப்பட்ட தொகை யாது,

(iii) 'அபி வெனுவென் அபி' நிதியத்துக்காக நிதி வழங்குமாறு மக்களைக் கோருவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள் யாவை,

(iv) இப்பிரசார நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவு,

(v) இப்பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்திலிருந்து இற்றைவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(ii) இந்நிதியத்தினால் முப்படை அல்லது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ளவர் களுக்கான வீடுகள் எங்கு அமைக்கப்பட்டுள்ளன

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீடுகளில் எத்தனை இற்றைவரை முப்படை வீரர்களுக்கு அல்லது பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன,

(ii) இந்நிதியத்தினால் கட்டப்படும் வீடுகள் வழங்கப்படும் முறைமை, விபரமாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0494 /'09

3.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை கொள்கை விஞ்ஞாபனத்தில் சிங்கள மொழி மூல வெளியீட்டின் 65 ஆம் பக்கத்தில் "யாவருக்கும் பல்கலைக்கழகம்" நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதுப் பல்கலைக்கழகம் பாடநெறிகளை ஆரம்பித்தல் என்பதன் கீழ் கடந்த சனாதிபதித் தேர்தலின் பின்பு இலங்கை பல்கலைக்கழகத் தொகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை யாது,

(ii) வெவ்வேறாக அவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உபயோகித்து எத்தனை தொலை நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை பல்கலைக்கழகத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளனர்,

(ii) இப்பாடநெறிகள் யாவை,

(iii) இப்பாடநெறிகளை ஆரம்பித்த பல்கலைக்கழகங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள பல்கலைக்கழகம் சார்ந்த பிரதேசங்களை பல்கலைக்கழகக் கிராமங்களாக அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவின் படி, பேராதனை பல்கலைக்கழகம் சார்ந்த பிரதேசங்களை அவ்வாறு பல்கலைக்கழகக் கிராமங்களாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் இது வரையில் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0522 / '09

4.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008/2009 தேசிய வீட்டுத்தோட்ட போட்டிக்காக தெல்தெனிய கல்வி வலயத்தைச் சேர்ந்த எத்தனை பாடசாலைகள் விண்ணப்பித்திருந்தன என்பதையும்,

(ii) இப்பாடசாலைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி வலயத்தில் குறிப்பிட்ட போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் ஒழுங்கு முறையாக யாவையென்பதையும்,

(iv) மபா/ தெல் /ஸ்ரீ தேவானந்த கனிஷ்ட வித்தியாலயம் உரிய போட்டிக்கு விண்ணப்பித்திருந்ததா என்பதையும்,

(v) ஆமெனில், இப்பாடசாலை தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0526 / '09

5.

கௌரவ சந்திம வீரக்கொடி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெளிநாட்டு கல்விக்காக புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்ற மருத்துவர்களில் மீண்டும் இலங்கைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) மீண்டும் வராதவர்களின் பெயர்கள், முகவரிகள், மற்றும் அவர்கள் வாழும் நாடுகள் எவை என்பதையும்,

(iii) அவ்வாறு மீண்டும் வராதவர்கள் தொடர்பில் இலங்கை அரசு செலவிட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மீண்டும் வராத மருத்துவர்களை வரவழைப்பதற்கு அரசினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0530 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச கைத்தொழில் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் திட்டமிடலாளர் பாட நெறியைப் பயின்று தகமைகளைப் பெற்றுக்கொண்ட 35000 பேர் வரை நாடெங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழில்வாண்மையாளர்கள் கட்டிட நிருமாணப் பணிகளுக்காக ஏற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) மேற்படி திட்டமிடலாளர்களுக்கு தமது தொழிலை சட்ட ரீதியானதாக்கிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் செய்து கொடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0538 / ' 09

7.

கௌரவ பாலித்த ரங்கே பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண கல்வி பணிப்பாளர் திரு. பீ. எம். அசோக்க ஜயசிங்க ஓய்வு பெற்றது எப்போது என்பதையும்,

(ii) அப்போது எத்தனை வயது பூர்த்தியாகி இருந்தது என்பதையும்,

(iii) ஓய்வு பெற்றதன் பின்னர் அவருக்கு முதலாவது சேவை நீடிப்பு எப்போது வழங்கப்பட்டது என்பதையும்,

(iv) அது எந்த சட்ட அடிப்படையில் என்பதையும்,

(v) அவருக்கு இரண்டாவது சேவை நீடிப்பு எப்போது வழங்கப்படும் என்பதையும்,

(vi) அது எந்த சட்ட அடிப்படையில் என்பதையும்,

(vii) அது எவ்வளவு காலத்துக்கு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மிகவும் சேவை மூப்புள்ள உத்தியோகத்தர் யார் என்பதையும்,

(ii) அந்த உத்தியோகத்தருக்கு வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி வழங்கப்படுமா என்பதையும்,

(iii) அவ்வாறெனின் அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 09/ 2007 , 09/ 2007 (1) மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/ 2008 என்பவற்றை மீறி வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் பதவியில் தற்போது இருக்கும் திரு. பீ. எம். அசோக்க ஜயசிங்கவினால் வழங்கப்படும் கட்டளைகள் பதவி உயர்வுகள் நியமனங்கள் மற்றும் அவர் பெற்றுக் கொள்ளும் சம்பளம், கொடுப்பனவுகள் சட்டரீதியானதா என்பதையும்,

(ii) இன்றேல், அவர் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0547 / ' 09

8.

கௌரவ (திருமதி) சுஜாதா அழகக்கோன் ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களாக தாபிக்கப்பட்ட கல்வியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை யாது,

(ii) அவை வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கல்வியியற் கல்லூரிகளுக்கு 2009 ஆம் ஆண்டில் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது,

(ii) கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு எவ்வளவு,

(iii) அதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணர்களுக்காக அரசு செலவு செய்யும் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2009 ஆம் ஆண்டில் பொலன்னறுவை புலதிஸிபுர கல்வியியற் கல்லூரியில் தங்கியிருக்கும் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்களுக்கென மாதாந்தம் அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவு

என்பதை அவர் அறிவாரா?

(ஈ) கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதியதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) (i) அவ்வாறாயின் இக்கொடுப்பனவை அதிகரிக்கக் கருதியுள்ளீர்கள,

(ii) அது எவ்வளவு தொகையினால்,

(iii) அது எப்போதிலிருந்து செயற்படுத்தப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0548 / ' 09

9.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொரட்டுவ மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின் பீரிஸ் மாவத்தையில் " U.C.LAND" எனும் பெயரில் உள்ள வரைபட இலக்கம் : 515 A ஆகியதும் 0.64516 ஹெக்டயார் பரப்பளவைக்கொண்டதுமான காணி, 1988 ஆண்டு அப்போதைய மொரட்டுவ நகர சபையினால் அளவிடப்பட்டு44 காணித் துண்டுகளாக காணி பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி காணிகளுக்கான தெளிவான உரித்து இதுவரை இக் காணி பெறுநர்களுக்கு வழங்கப்படவில்லையென்பதை அவர் எற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி காணிபெறுநர்களுக்கு தெளிவான உறுதிகளை வழங்குவதன் மூலம் இவர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களிலிருந்து மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0223 / '09

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "மாத்தறை அபிவிருத்தி நிதியம்" எனும் பெயரில் ஒரு நிதியம் கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சில் செயற்படுத்தப்பட்டதா,

(ii) அவ்வாறாயின், அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(iii) இந்நிதியம் செயற்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்தோர் யாவர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்துடன் தொடர்புடைய வங்கி மற்றும் வங்கிக் கணக்கு இலக்கம் யாது,

(ii) இந்நிதியத்துக்கு நிதி கிடைத்த மூலங்கள் யாவை,

(iii) இந்நிதியத்துக்குக் கிடைத்த நிதித்தொகை எவ்வளவு,

(iv) இந்நிதியத்தின் நிதி எவ்வாறான விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது,

(v) அதன் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0523 /'09

11.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி, மஹியங்கனை நெடுஞ்சாலை விஸ்தரிப்பு பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்,

(ii) அந்த நெடுஞ்சாலையின் பணிகள் மதிப்பிடப்பட்டுள்ளவாறு எப்போது முடிவடையும் என்பதையும்,

(iii) அதற்காக மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) அந்த நெடுஞ்சாலையின் தூரம் எத்தனை கிலோமீற்றர் என்பதையும் (அபிவிருத்தி செய்யப்படும் பகுதி)

(v) அதன்படி கிலோமீற்றர் ஒன்றுக்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0527 / '09

12.

கௌரவ சந்திம வீரக்கொடி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 முதல் 2009 வரையிலான காலகட்டத்தில், கடமை நேரங்களில் தனியார் வைத்திய சேவையில் ஈடுபட்டதன் மூலம் கடமையிலிருந்து தவறியுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) அத்தகைய மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சினால் மேற்படி மருத்துவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை யாதென்பதையும்,

(iii) அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0532 /'09

13.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தொழில் உறவுகள், மனித வலு அமச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு யூலை வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதன் விளைவாக தொழில்களை இழந்த நெசவுக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

(ii) இவர்களில் மீண்டும் தொழில் வழங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) மீண்டும் தொழில் கிடைக்கப்பெறாதவர்களின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

(iv) இவர்களுக்கு தொழில் கிடைக்காமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 32/89 பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபன பகிஷ்கரிப்பாளர்களுக்கான சலுகைகள் சிலருக்கு இதுவரை வழங்கப் படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2006.08.30 ஆம் திகதிய அப/06/1540/230/039 இலக்கமுடைய அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ள போதிலும் தொழில் ஆணையாளர் இக் கொடுப்பனவுகளை தாமதிக்கின்றார் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0239 / '09

14.

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானசேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள வெளிச்ச வீடுகளின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

(ii) தற்போது செயற்படுகின்ற வெளிச்ச வீடுகளின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெவிநுவரவில் அமைந்துள்ள வெளிச்ச வீட்டிலிருந்து 2005 சனவரி 01 ஆம் திகதியாகும்போது ஒளி வீசப்பட்ட தூரம் எத்தனை கடல் மைல்கள் என்பதையும்,

(ii) மேற்படி வெளிச்ச வீட்டிலிருந்து 2009 சனவரி 01 ஆம் திகதியாகும்போது ஒளி வீசப்படும் தூரம் எத்தனை கடல் மைல்கள் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

0524 /'09

15.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "நாம் பயிரிடுவோம் - நாட்டை கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப் பொருளின் கீழ் 2007 /08 பெரும்போகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய வீட்டுத் தோட்டப் போட்டி எத்தனை துறைகளின் கீழ் நடத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்த துறைகள் எவை என்பதையும்,

(iii) அந்தந்த துறைகளில் வெற்றிபெற்றவர்கள் யார் என்பதையும்,

(iv) 2008 /2009 ஆம் ஆண்டுகளில் குறிப்பிட்ட போட்டிகள் நடத்தப்பட்டனவா என்பதையும்

(v) 2007/ 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008 / 2009 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 3.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ லலித் திசாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*4.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*5.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*8.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*28.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

29.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

32.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

33.

கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.